## INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

**SUMMATIVE ASSESSMENT - I ( 2014-2015 )**

**CLASS : X**

| | | |
|---|---|---|
| Maximum Marks : 90 | **TAMIL** | Time : 3 hours |
| மதிப்பெண்கள் : 90 | | நேரம் : 3 மணி |

# தமிழ்

The question paper is diveded into four Sections.
இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | | |
|---|---|---|---|
| SECTION | **: A** | Reading Comprehension | - 15 Marks |
| பிரிவு | **: அ** | படித்தல் (உரைநடைப்பகுதி ) | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | **: B** | Writing | - 20 Marks |
| பிரிவு | **: ஆ** | எழுதுதல் | - 20 மதிப்பெண்கள் |
| SECTION | **: C** | Grammar | - 15 Marks |
| பிரிவு | **: இ** | இலக்கணம் | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | **: D** | Literature / Textbooks | - 40 Marks |
| பிரிவு | **: ஈ** | இலக்கியம் / தமிழ்ப்பாடநூல்கள் | - 40 மதிப்பெண்கள் |

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

★ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

★ வினாத்தாள் 13 பக்கங்களைக் கொண்டது.

## பகுதி - அ

1 ) **பின்வரும் பத்திகளைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

ஆங்கிலத்தில் சர் எட்வின் ஆர்னால்டு என்பவர் எழுதிய தி லைட் ஆப் ஏசியா என்ற நூலின் மொழிபெயர்ப்பே ஆசியஜோதி ஆகும். இந்நூலை இயற்றியவர் நாஞ்சில் நாட்டிலுள்ள தேரூரில் பிறந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஆவார். உலகிற்கு வழிகாட்டியாகத் தோன்றிய புத்த பெருமானின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சி களைப் பாடுபொருளாகக் கொண்டுள்ளது. சாக்கிய மன்னன் சுத்தோதனனுக்கும், அரசி மாயாதேவிக்கும் சித்தார்த்தனாக புத்தர் அவதரித்தக் கதையும், கருணை நிறைந்த முகத்தினையுடைய சித்தார்த்தர் தேவதத்தனிடமிருந்து அன்னப்பறவையைக் காத்த நிகழ்ச்சியும், யசோதரையை மணந்த நிகழ்ச்சியையும், தேவகீதம் கேட்டு மனம் மாறி இன்ப வாழ்க்கையை விரும்பி நீக்கி விட்டுத் துறவு வாழ்க்கையைத் துணிந்து போற்றி-யதையும், ஆடு மேய்க்கும் இடை குலச் சிறுவனுக்குப் பிறப்பில் ஏற்றத் தாழ்வு இல்லை என்பதை உணர்த்திய கதையும், மாதவம் செய்யும் வள்ளலான புத்தருக்கு அமுது

படைத்து மகிழ்ந்த சுஜாதையின் கதையும், இறந்த மகனைக் கையில் ஏந்தி அவனை உயிர்ப்பித்துத் தருமாறு வேண்டிய தாய் கௌதமிக்குப் பிறந்தவர் இறப்பதும், இறந்தவர் பிறப்பதும் உலகின் இயற்கை என அறிவுரை கூறும் பகுதியும் ஆசியஜோதியில் இடம்பெற்றப் பகுதிகளாகும்.

<u>வினாக்கள்</u> 5 x 1 = 5

**i) தி லைட் ஆப் ஏசியா என்ற நூலின் மொழிபெயர்ப்பு**

அ ) மருமக்கள் வழி மான்மியம்

ஆ) உமர்கய்யாம் பாடல்கள்

இ ) அழகம்மை ஆசிரிய விருத்தம்

ஈ ) ஆசியஜோதி

**ii) புத்தருக்கு அமுது படைத்து மகிழ்ந்தவர்**

அ ) மாயாதேவி

ஆ) யசோதரை

இ ) சுஜாதை

ஈ ) ஆடு மேய்க்கும் சிறுவன்

**iii) புத்தர் தேவதத்தனிடமிருந்து காப்பாற்றியது**

அ ) கோலமயில்

ஆ) கலைமான்

இ ) அன்னப்பறவை

ஈ ) வெண்புறா

**iv) புத்தர்பிறந்த நாடு**

அ ) நாஞ்சில் நாடு

ஆ) சாக்கிய நாடு

இ ) சோழ நாடு

ஈ ) கலிங்க நாடு

**v) தாய் கௌதமிக்குப் புத்தர் கூறிய அறிவுரை**

அ ) பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை

ஆ) உயிரைக் காக்க முயல்பவனுக்கே உயிர் சொந்தமானது

இ ) பிறந்தவர் இறப்பதுவும், இறந்தவர் பிறப்பதுவும் உலகின் இயற்கை

ஈ ) மனிதன் அறிவு, தியாகம், உழைப்பு ஆகியவற்றாலேயே நன்மை பெற முடியும்

ஆ) இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களுள் பாரதியார் முதலிடம் பெறுகிறார். இவர் எட்டையபுரத்தில் சின்னச்சாமி அய்யருக்கும், இலக்குமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவரின் இயற்பெயர் சுப்பிரமணியன். செல்லப்பெயர் சுப்பையா. தனது ஐந்தாம் வயதில் தாயை இழந்தார். பிறகு சிற்றன்னையால் வளர்க்கப்பட்டார். நெல்லை இந்துக் கல்லூரியில் பயின்ற இவர் தன்னுடைய பதினோறாம் வயதில் பாரதி என்று எட்டயபுரம் சமஸ்தானப் புலவர்களால் சிறப்புப் பட்டம் சூட்டப்பெற்றார். இப்பெயரே இவருக்கு நிலைத்து விட்டது.செல்லம்மாளைத் தன் வாழ்க்கைத்துணையாக ஏற்றுக் கொண்டார். விவேக பானு என்னும் இதழில் பாரதியார் இயற்றிய தனிமை இரக்கம் என்னும் பாடல் முதன் முதலில் அச்சேறியது. சுதேசமித்திரன், இந்தியா, பாலபாரதம் முதலிய இதழ்களில் பொறுப்பாசிரியராகவும், ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

**வினாக்கள்** **5 x 1 = 5**

**i) பாரதியாரின் இயற்பெயர்**

அ ) பாலகுமாரன்

ஆ) சுப்பிரமணியன்

இ ) சுப்புரத்தினம்

ஈ ) சின்னச்சாமி

**ii) முதன் முதலில் அச்சேறிய பாரதியாரின் பாடல்**

அ ) கண்ணன்பாட்டு

ஆ) தனிமை இரக்கம்

இ ) பாலபாரதம்

ஈ ) காணி நிலம் வேண்டும்

**iii) இதழ் என்பதன் பொருள்**

அ ) கவிதை

ஆ) கதை

இ ) செய்தித்தாள்

ஈ ) நூல்

**iv) பாரதி என்று பெயர் சூட்டியவர்கள்**

அ ) பாரதியாரின் பெற்றோர்கள்

ஆ) பாரதியாரின் நண்பர்கள்

இ ) எட்டையபுரம் சமஸ்தானப் புலவர்கள்

ஈ ) ஆங்கிலேயர்கள்

**v) சுப்பையா என்பது**

அ ) பாரதியின் தந்தையின் பெயர்

ஆ) பாரதியின் புனைப்பெயர்

இ ) பாரதியின் செல்லப்பெயர்

ஈ ) பாரதியின் நண்பனின் பெயர்

3 ) தாள் இல்லாமல், கம்பி இல்லாமல் வான் வழியே மின் அலைகள் மூலம் கணினியால் அனுப்பப்படும் செய்தி மின் அஞ்சல் ஆகும். வைய வான் வலை மின் அஞ்சலின் ஊடகம் ஆகும். ஆவணங்கள்,வண்ணப்படங்கள்,குறுஞ்செய்திகள் கடிதச்செய்திகள் போன்றவற்றை நாம் விரும்பும் முகவரிக்குக் கணப்பொழுதில் இதனால் அனுப்பிவிடலாம்.தொலைத் தொடர்புத் துறையில் மின்அஞ்சல் பெருந் தொண்டாற்றி வருகிறது.

<u>வினாக்கள்</u> **5 x 1 = 5**

**i) மின் அஞ்சல் என்பது**

அ) மின்சாரம்

ஆ) மின் அலைகள் மூலம் கணினியால் அனுப்பப்படும் செய்தி

இ) வண்ணப்படங்கள்

ஈ ) தந்தி

**ii) மின் அஞ்சலின் ஊடகம்**

அ) தொலைக்காட்சி

ஆ) கணினி

இ) வைய வான் அலை

ஈ ) கம்பி

**iii) கணப்பொழுது - என்பதன் பொருள்**

அ) நொடிப்பொழுது

ஆ) கார்காலப்பொழுது

இ ) மாலைப்பொழுது

ஈ ) வேனிற்பொழுது

**iv) மின் அஞ்சல் பெருந்தொண்டாற்றி வருவது**

அ) சுகாதாரத்துறையில்

ஆ) தொலைதொடர்புத்துறையில்

இ) வேளாண்மைத்துறையில்

ஈ ) தொல்லியல்துறையில்

**v) தாள் என்பது**

அ) கடிதம்

ஆ) கருத்துரை

இ) காகிதம்

ஈ ) கட்டுரை

## பகுதி - ஆ

1 x 8 = 8

4 ) நீ கண்டு களித்த இன்பச்சுற்றுலா குறித்து தோழன் அல்லது தோழிக்குக் கடிதம் எழுதுக.

( அல்லது )

மருத்துவ வசதி வேண்டி ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு விண்ணப்பம் எழுதுக.

**எக்கடிதமாயினும் உமது முகவரி,**

அறிவழகன் / அமுதவல்லி , 7 மேலத்தெரு, ஆர்விப்பட்டி , திருப்பரங்குன்றம்.

1 x 8 = 8

**5 ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில் ஏதேனும் ஒன்றிற்குக் கட்டுரை எழுதுக.**

அ) முன்னுரை -மழைநீர் சேமிப்பின் அவசியம் - கிராமம் மற்றும் நகரங்களில் மழைநீர் சேமிப்பு - மழைநீர் சேமிப்பி முறைகள் - மழைநீர் சேமிப்புத் திட்டம் - முடிவுரை.

ஆ) முன்னுரை - மதுரை மாநகர் - தெருக்கள் - இலக்கியத்தில் மதுரை - கோவில் மாநகர் - தூங்காநகரம் - திருவிழாக்கள் - காணவேண்டியவை - முடிவுரை.

இ) முன்னுரை - இந்தியாவின் விடுதலை நாள் - ஆகஸ்டு 15 - அரசு விழா - மக்கள் விழா - பள்ளியில் உரிமைநாள் விழா - முடிவுரை.

6 ) இரத்ததான முகாம் பற்றிய அறிக்கை ஒன்று எழுதுக. 1 x 4 = 4

( அல்லது )

பிளாஸ்டிக் பொருட்கள் ஒழிப்பு முகாம் பற்றிய அறிக்கை ஒன்று எழுதுக.

## பகுதி - இ

**7 ) சான்று தருக. ( மூன்று மட்டும் )** **3 x 1 = 3**

**i) ஐகாரக்குறுக்கம்**

அ) கடலை

ஆ) மௌனம்

இ) வௌவால்

ஈ) வரும் வண்டி

**ii) பெயரெச்சம்**

அ) அவன் உழவன்

ஆ) கோதை சென்றாள்

இ) படித்த கயல்விழி

ஈ) அருளரசு வந்தான்

**iii) இரட்டைக்கிளவி**

அ) எறி எறி

ஆ) பட பட

இ) சேர சோழன்

ஈ) வருக வருக

**iv) கொளல்வினா**

அ) மனப்பாடச் செய்யுளைப் படித்தாயா ?

ஆ) பருப்பு உள்ளதா ?

இ) மாணவர்களே! உங்களுக்குச் சீருடை இல்லையோ ?

ஈ) முருகா சாப்பிட்டாயா ?

**v) உருவகம்**

அ) அமுதமொழி

ஆ) மதிமுகம்

இ) மலரடி

ஈ ) பாதமலர்

8 ) **நிரப்புக. ( மூன்று மட்டும் )** **3 x 1 = 3**

**i) மொழிக்கு இடையிலும், இறுதியிலும் ___________ வராது.**

அ) ஐகாரம்

ஆ) ஔகாரம்

இ) மகரம்

ஈ) லகரம்

**ii) ஓர் எச்ச வினை _________ கொண்டு முடிந்தால் அது பெயரெச்சம் எனப்படும்.**

அ) பெயரை

ஆ) வினையை

இ) வினைமுற்றை

ஈ ) ஒருமை என்ற எண்ணை

**iii) வீட்டின் முன் ஐவர் கோலமிட்டனர் - என்பது ___________ .**

அ) வெளிப்படை

ஆ) ஒன்றொழி பொதுச்சொல்

இ) இனங்குறித்தல்

ஈ ) அடுக்குத்தொடர்

**iv) இறை, செப்பு, பதில் என்பன ____________ .**

ஆ) வினாவின் வேறுபெயர்கள்

ஆ) விடையின் வேறுபெயர்கள்

இ) வேற்றுமை உருபுகள்

ஈ ) உவம உருபுகள்

**v) உவமத்தொகை என்பது ____________ .**

அ) தொகையுவமை

அ) விரியுவமை

இ) உவம உருபு

ஈ) உருவகம்

**9 ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க. ( மூன்று மட்டும் )**

**i) முள் + தீது ( சேர்த்து எழுதுக )** **3 x 1 = 3**

அ) முட்டீது

ஆ) முக்டீது

இ) மு.'.டீது

ஈ ) முள்தீது

**ii) கண்ணன் உழுதான் ( எழுவாய் செய்யும் செயலை எழுதுக )**

அ) நடத்தல்

ஆ) உழுதல்

இ) ஓடுதல்

ஈ ) ஆடுதல்

**iii) தீ தீ தீ ( அடுக்குத் தொடரின் பொருள் தருக )**

அ) விரைவு

ஆ) துன்பம்

இ) அச்சம்

ஈ ) அசைநிலை

**iv) ஆடுவாயா ? ( இனமொழிவிடை தருக )**

அ) ஆடுவேன்

ஆ) ஆட மாட்டேன்

இ ) பாடுவேன்

ஈ ) கால் வலிக்கும்

v) மலரன்ன சேவடி ( தொடரில் இடம்பெற்றுள்ள உவம உருபை எடுத்து எழுதுக )

அ) ஒப்ப

ஆ) உறழ

இ) அன்ன

ஈ ) போல

10 ) **இலக்கணக்குறிப்பு தருக.** ( மூன்று மட்டும் ) **3 x 1 = 3**

**i) தரும் வளவன்**

அ) ஐகாரக்குறுக்கம்

ஆ) ஔகாரக்குறுக்கம்

இ) மகரக்குறுக்கம்

ஈ ) ஆய்தக்குறுக்கம்

**ii) அந்தமான்**

அ) தனிமொழி

ஆ) தொடர்மொழி

இ) பொதுமொழி

ஈ ) வினையெச்சம்

**iii) நந்தினி வந்தனள், போயினள்**

அ) தெரிநிலை வினையெச்சம்

ஆ) குறிப்பு வினையெச்சம்

இ) இறந்தகால வினையெச்சம்

ஈ ) முற்றெச்சம்

**iv) தங்கம், வைரம்**

அ) வெளிப்படை

ஆ) குறிப்புச்சொல்

இ) உயர்திணைப் பொதுப்பெயர்

ஈ ) இனங்குறித்தல்

**v) வருவாயா ? எனில் வாரேன் என்பது .**

அ) மறைவிடை

ஆ) நேர்விடை

இ) ஏவல் விடை

ஈ) வினாஎதிர்வினாதல் விடை

11 ) **சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.(மூன்று மட்டும்)** **3 x 1 = 3**

**i)** அ) வினா ஐந்து வகைப்படும்

ஆ ) வினா ஆறு வகைப்படும்

இ ) வினா ஏழு வகைப்படும்

ஈ ) வினா எட்டு வகைப்படும்

**ii)** அ) வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் சேரும் போது நிலைமொழி ஈறு நீங்கும்.

ஆ) வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் சேரும் போது நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்.

இ) வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் சேரும் போது வருமொழி முதல் கெடும்.

ஈ ) வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் சேரும் போது நிலைமாழி ஈற்றில் மாற்றம் ஏதும் நிகழ்வதில்லை.

**iii)** அ) செம்மை + மொழி - என்பது ஈறுபோதல் என்னும் விதிப்படி புணரும்.

ஆ) செம்மை + மொழி - என்பது ஆதிநீடல் என்னும் விதிப்படி புணரும்.

இ) செம்மை + மொழி - என்பது தன்னொற்றிரட்டல் என்னும் விதிப்படி புணரும்.

ஈ ) செம்மை + மொழி - என்பது இகமிகல் என்னும் விதிப்படி புணரும்.

**iv)** அ) மரவடி - என்பது இயல்புப்புணர்ச்சி.

ஆ) மரவடி - என்பது பண்புப்பெயர்புணர்ச்சி.

இ) மரவடி - என்பது திசைப்பெயர்புணர்ச்சி.

ஈ) மரவடி - என்பது மகரஈற்றுப்புணர்ச்சி.

**v)** அ) மீமிசை ஞாயிறு - என்பது ஒருபொருட் பன்மொழி.

ஆ) மீமிசை ஞாயிறு - என்பது எதிர்கால வினையெச்சம்.

இ) மீமிசை ஞாயிறு - என்பது தெரிநிலை வினைமுற்று.

ஈ ) மீமிசை ஞாயிறு - என்பது மகரக்குறுக்கம்.

## பகுதி - ஈ

12) **பின்வரும் பத்தியைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

பழந்தமிழர் அன்பு வழியினர். அறத்திற்கே அன்பு சார்பு என்பதை நன்கு உணர்ந்திருந்தனர். அன்பைப் போற்றியது போலவே வீரத்தையும் ஏற்றிப் போற்றினர். களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே என்னும் புறப்பாடல் வீரத்தை முதல்

கடமையாக்குகிறது. வீரமற்ற ஆடவரை அக்காலப் பெண்கள் மணந்து கொள்ள விழையார். ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற்புலவர் பெண்களின் பெருவீரத்தைப் பாடுகிறார். முதல்நாள் போரில் தந்தையைப் பறிகொடுத்தாள். இரண்டாம் நாள் போரில் கணவனை இழந்தாள். மூன்றாம் நாளும் போர் தொடர்கிறது. மறக்குடியில் பிறந்த மாண்புடையவள் அப்பெண். நெஞ்சம் துடித்த அவள், பால்மணம் மாறாச் சிறுமகன் தன்னைச் செருக்களம் நோக்கிப் பகைத்திறம் மாய்க்க விடுத்தாள். என்னே அவள் துணிவு !

**<u>வினாக்கள்</u>** **5 x 1 = 5**

**i) பழந்தமிழர்**

அ) அன்பை மட்டும் போற்றினர்.

ஆ) அன்பையும், வீரத்தையும் போற்றினர்.

இ) இன்பமாக வாழ்ந்தனர்.

ஈ ) துன்பவாழ்வை வெறுத்து நீக்கினர்.

**ii) அக்காலப் பெண்கள்**

அ) வீரமுள்ள ஆடவரை மணந்து கொள்ள விழையார்.

ஆ) வீரமற்ற ஆடவரை மணந்து கொள்ள விழையார்.

இ ) செல்வமற்ற ஆடவரை மணந்து கொள்ள விழையார்.

ஈ ) கல்வியறிவில்லாத ஆடவரை மணந்து கொள்ள விழையார்.

**iii) களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே - இத்தொடரில் காளை என்னும் சொல் குறிப்பது**

அ) ஆடவரை

ஆ) பசுவினை

இ) பெண்களை

ஈ ) எருதுவை

**iv) செருக்களம் என்பதன் வேறு சொல்**

அ) போர்க்களம்

ஆ) களஞ்சியம்

இ ) கலைக்கூடம்

ஈ ) ஆடுகளம்

**v) களிறு - என்பதன் பொருள்**

அ) கரும்பு

ஆ) குதிரை

இ) யானை

ஈ ) சிங்கம்

13 ) பேச்சைத் தொடங்குவது எடுப்பு. பேச்சின் தொடக்கம் நன்றாக இராவிட்டால் கேட்பவர்களுக்குப் பேச்சினைக் குறித்த நல்லெண்ணம் தோன்றாது.தட்டுத் தடங்கலின்றிப் பேசுவதற்குத், தொடக்கமே அடித்தளமாகும்.கேட்போரை வயப்படுத்தும் முறையில் பேச்சைத் தொடங்க வேண்டும்.அவையோர்தம் உள்ளங்களைக் கேட்பதற்குரிய பக்குவத்தில் வைத்திருக்க வேண்டும்.மண்ணில் ஈரப்பதம் இருந்தால்தான் விதைக்க முடியும் என்பதைப் போலக் கேட்போரைத் தன்வயப்படுத்துவது மிகவும் இன்றியமையாதது. அவையில் இருப்போரை விளித்துச் சுருக்கமான முன்னுரையுடன் பேசத் தொடங்குவதே சிறப்புடையது.பேசத் தொடங்கிய ஓரிரு மணித்துளிகளில் பேசப்போகும் பொருளில் புகுந்து வீடுவது பாராட்டுக்குரியது.இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப தொடக்கவுரை அமைதல் நன்று.

<u>வினாக்கள்</u> **5 x 1 = 5**

**i) தட்டுத்தடங்கலின்றிப் பேச அடித்தளமான அமைவது**

அ) பேச்சின் தொடக்கம்

ஆ) பேச்சின் முடிவு

இ) விரைவாகப் பேசுதல்

ஈ ) விபரமாகப் பேசுதல்

**ii) வயப்படுத்துதல் - என்பதன் பொருள்**

அ) நிறைதல்

ஆ) கவர்தல்

இ ) தொடர்தல்

ஈ ) முடித்தல்

**iii) இப்பகுதியில் இடம் பெற்றுள்ள உவமை**

அ) மலரும் மணமும் போல

ஆ) மண்ணில் ஈரப்பதம் இருந்தால்தான் விதைக்க முடியும் என்பதைப் போல

இ) கண்ணும் இமையும் போல

ஈ ) நகமும் சதையும் போல

**iv) தொடக்கவுரை அமைதல்**

அ) இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்பத் தொடக்கவுரை அமைதல் வேண்டும்

ஆ) காலத்திற்கும், நேரத்திற்கும் ஏற்பத் தொடக்கவுரை அமைதல் வேண்டும்

இ) நளினமாக தொடக்கவுரை அமைதல் வேண்டும்

ஈ) விரைவாக தொடக்கவுரை அமைதல் வேண்டும்

**v) தொடக்கம் - என்பதன் எதிர்ச்சொல்**

அ) முடிவு

ஆ) ஆரம்பம்

இ) ஆதி

ஈ) முதல்

14 ) பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து, தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோ மில்லை
தகத்தாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்.

<u>வினாக்கள்</u> 4 x 1 = 4

**i) இப்பாடலின் ஆசிரியர்**

அ) கண்ணகனார்

ஆ) காரியாசன்

இ) பாவேந்தர் பாரதிதாசன்

ஈ) நக்கீரனார்

**ii) ஊர்தோறும் ஏற்படுத்த வேண்டியவை**

அ) இலவச நூல் நிலையங்கள்

ஆ) இலவச பாடசாலைகள்

இ) இலவச மருத்துவமனைகள்

ஈ) இலவச உணவுச்சத்திரங்கள்

**iii) தயை - என்பதன் பொருள்**

அ) துணை

ஆ) செயல்

இ) நூல்

ஈ) விருப்பம்

**iv) இப்பாடலில் இடம்பெற்றுள்ள இரட்டைக்கிளவி**

அ) சலசல

ஆ) கலகல

இ) மடமட

ஈ) படபட

**15 ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக. 2 x 5 = 10**

அ ) தமிழ் மொழிக்குரிய பதினொரு தகுதிப்பாடுகளில் முதல் நான்கினை எழுதுக.

ஆ ) பெண்ணுரிமைக்கான வழிமுறைகளைப் பெரியார் வழிநின்று விளக்குக.

இ ) மேடைப்பேச்சின் இன்றியமையாமையை எழுதுக.

ஈ ) கடல் வாணிகம் குறித்து எழுதுக.

உ ) தமிழர் இசைக்கலை குறித்துத் தொகுத்து எழுதுக.

**16 ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக. 2 x 4 = 8**

அ ) தமிழ்விடு தூது பாடல் வாயிலாக நீவிர் அறியும் கருத்துகளை எழுதுக.

ஆ ) சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை ?

இ ) தேரா மன்னா என விளித்துக் கண்ணகி கூறியன யாவை ?

ஈ ) காலமறிந்து செயல்படுவதால் உண்டாகும் பயன் யாது ?

**17 ) பின்வரும் துணைப்பாட வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விரிவான விடை தருக.**

அ ) தொல்லியல்துறை பற்றி எழுதுக. **1 x 8 = 8**

ஆ ) அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

இ ) கமலநாதன் எவ்வாறு மனம் திரும்பினான் என்பதை விளக்குக.